

# ருக்குன் நெகாராவை வழிகாட்டியாக கொள்வீர்!

## நாட்டு மக்களுக்கு மாமன்னர் வலியுறுத்தல்

கோலாலம்பூர், செப். 1-

ருக்குன் நெகாரா கோட்பாடு என்பது நமது ஆத்மா, நமது போராட்ட உணர்வு, நமது தேசிய ஒருமைப்பாட்டுக்கான அடிப்படை என்று மாட்சிமை தங்கிய மாமன்னர் நேற்று நாடு கொண்டாடிய 63 ஆவது சுதந்திர நாள் உரையில் நாட்டு மக்களுக்கு வலியுறுத்தினார்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட இந்த கோட்பாட்டை நாட்டில் அனைத்து நிலைகளிலும் உள்ள மக்கள் கடைப்பிடிக்க வேண்டும். அந்த 5 கோட்பாடுகளும் இந்த நாட்டில் மாறுபட்ட இன, சமய, கலாச்சார, மொழி வேறுபாடுகளை கொண்ட மக்கள் இந்த

பக்கம் 13

**முதல் பக்கத் தொடர்ச்சி** **ருக்குன் நெகாராவை....**

வேறுபாடுகளிலும் ஒன்றுபட்டு அமைதி, நல்லிணக்கத்தோடு வாழ முடியும் என்பதை உணர்த்துகிறது என்றார் அவர்.

நமது வலிமையான சமய நம்பிக்கைகள் தாம் நமது வெற்றிக்கு அடிப்படை. நாட்டு மக்கள் மாமன்னர் மீது விசுவாசகமாக இருப்பதும் நாட்டின் அரசாட்சி சின்னங்களை மதிப்பதும் நாட்டின் இறையாண்மையைப் போற்றுவதும் முக்கியம் என்றார் அவர்.

தேசிய தின வரலாற்றில் ஒரு மாமன்னர் 50 ஆண்டுகளுக்கு பின்னர் உரையாற்றுவது முதன்முறையாகும். புத்ராஜெயாவில் போர்வீரர் சதுக்கத்தில் இந்த விழா நடைபெற்றது.

ருக்குன் நெகாராவில் இடம்பெற்றுள்ள அந்த கோட்பாடுகள் மிக உயர்ந்த பண்புகளை வலியுறுத்துகின்றன. ஒரு சுதந்திர நாடு சிறப்படைவதற்கான ஒரு வழிகாட்டியை கொண்டிருக்கின்றன. எனவே நமது நாட்டு தலைவர்கள், அரசாங்கம மற்றும் ஒட்டுமொத்த மலேசியர்கள் அனைவரும் ருக்குன் நெகாராவை ஒரு வழிகாட்டியாக கொள்ளவேண்டும்.

அதே நேரத்தில் நாட்டின் அரசியல் சாசனத்தில் உள்ள உரிமைகள், சலுகைகளை அனைத்து மக்களும் மதித்து போற்ற வேண்டும். எல்லா நிலைகளிலும் அதைத்தற்காக்க வேண்டும். நாட்டின் நீதித்துறையையும் சட்டத்தையும் ஒவ்வொரு குடிமகனும் மதித்து நடக்க வேண்டும் என்றார் மாமன்னர்.

கோவிட்-19பெருந்தொற்றுதுயரிலிருந்துநாட்டை மீட்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் தாம் பாராட்டுவதாகும் மாமன்னர் கூறினார். அதேநேரத்தில் மக்களின் நம்பிக்கைக்கும் அவர்களின் உறுதிப்பாட்டுக்கும் நன்றி தெரிவித்துகொள்கிறேன் என்றார் அவர்.

நாட்டின் சுதந்திரத்தையும் அமைதியையும் காக்க வேண்டியது மக்களின் கடமையாகும். பல இன சமுதாயத்தின் நல்லிணக்கம் தான் நாட்டின் வலிமையின் முதுகெலும்பு என்றார் அவர்.

Malaysia Nanban, pg 1 & 13, 1 Sep 2020

Akhbar : Malaysia Nanban

Tarikh : 1 September 2020

Mukasurat : 1 & 13

Tajuk : **Jadikan Rukun Negara sebagai panduan asas! Yang di-Pertuan Agong menegaskan rakyat.**

Ringkasan : Rukun Negara yang lahir 50 tahun lepas sebagai asas kepada perpaduan nasional dan pembentukan negara ini, bukan sekadar untuk dijulang secara simbolik menerusi bacaan setiap kali negara menyambut Hari Kebangsaan, titah Yang di-Pertuan Agong Al-Sultan Abdulllah Ri'ayatuddin Al-Mustafa Billah Shah. Sebaliknya, titah baginda, roh dan semangat rukun negara hendaklah dihayati dan diamalkan dalam setiap aspek kehidupan seharian. Lima prinsip Rukun Negara adalah formula bagaimana rakyat yang berbilang bangsa, agama, budaya dan bahasa boleh mengatasi segala perbezaan serta kepelbagaian tersebut, seterusnya hidup secara rukun dan damai. "Rukun Negara juga menuntut sebuah negara bangsa yang dibentuk atas keteguhan pegangan agama yang kukuh, manakala rakyat pula dituntut untuk mencurahkan taat setia kepada raja yang menjadi payung dan lambang kedaulatan negara," titah baginda. Titah Al-Sultan Abdullah, prinsip teras terkandung dalam Rukun Negara bersifat sejagat dengan merentasi nilai murni semua bangsa, agama serta berupaya menjadi panduan hidup sebagai rakyat sebuah negara yang merdeka. Jadi, prinsip tersebut seharusnya menjadi panduan serta amalan oleh semua pihak termasuk pemimpin negara, kerajaan dan rakyat Malaysia, titah Seri Paduka. Pada masa sama Yang di-Pertuan Agong turut mengingatkan semua pihak supaya menghormati dan mempertahankan semua perkara dan hak keistimewaan yang disepakati sebelum ini dalam Perlembagaan Persekutuan. Sementara itu dalam menyambut Hari Kebangsaan, Al-Sultan Abdullah mengucapkan tahniah kepada kerajaan yang amat prihatin dalam usaha mengukuhkan semula ekonomi negara selain terus membela kebajikan rakyat sepanjang negara berdepan pandemik Covid-19. Yang di-Pertuan Agong juga merakamkan ucapan terima kasih kepada rakyat kerana menzahirkan daya tahan dan semangat prihatin yang tinggi dalam menghadapi cabaran itu. Bersempena sambutan Hari Kebangsaan dan Ulang Tahun ke-50 Rukun

Negara kali ini, Seri Paduka mengajak seluruh rakyat untuk menghargai serta menjaga kemerdekaan dan keamanan yang dikecapi negara. Sesungguhnya keharmonian dan kerukunan hidup dalam sebuah masyarakat yang berbilang kaum merupakan tunjang kepada kekuatan negara.